


# தமிழகம், கேரளாவில் தென்மேற்குப் பருவமழை!

## 3 நாளில் தொடங்கும்!

சென்னை, ஜூன் 2–

தமிழகம், கேரளாவில் தென்மேற்குப் பருவமழை 3 நாட்களில் தொடங்கக்கூடும். இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென்மேற்குப் பருவமழை அடுத்த 3 நாட்களில் அரபிக் கடல், வங்கக்கடல், லட்சத்தீவுகள், கேரளா, தமிழகத்தின் சில பகுதிகளுக்கு முன்னேறும் வகையில் நிலைமை சாதகமாக உள்ளது. அதனால், தமிழகம், கேரளாவில் தென்மேற்குப் பருவமழை அடுத்த 3 நாட்களில் தொடங்க வாய்ப்பு உள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல், அதை ஒட்டிய தெற்கு கேரளப் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஒருசில இடங்களில் (ஜூன் 1) முதல் 6ம் தேதி வரை இடி, மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். குறிப்பாக, இன்று நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கரூர், நாமக்கல், ஈரோடு, சேலம், திருச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகரிக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் லேசான மழை பெய்யும்.

வெப்பநிலை 86 டிகிரி முதல் 104 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக்கூடும். தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் இன்று முதல் 4ம் தேதி வரை மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் சூறாவளிக் காற்று வீசக்கூடும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தூத்துக்குடி வருகை தந்த நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் - கழகத் துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

### வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கை!

வேலூர், ஜூன்2-

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க.சார்பில் ஜூன் 3 அன்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா அனைத்து ஒன்றியம் பகுதி பேரூர் - கிளை உட்பட்ட அனைத்துப் பகுதியிலும் சிறப்பாக கொண்டாடிடுவோம் என மாவட்டக் கழக பொறுப்பாளர் டி.எம் கதிர் ஆனந்த் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நெஞ்சங்களில் என்றும் நிலைத்திருக்கும் அந்த மாபெரும் தலைவரை மரியாதையுடன் நினைவுக் கூருவோம்.



தமிழ்மொழி, சமூகநீதி, சமத்துவம் மற்றும் மாநில உரிமைகளுக்காக தனது வாழ்நாள் முழுவதும் போராடிய கலைஞர் அவர்கள், மக்களின் முன்னேற்றத்திற்காக தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவராவார்.

பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை, மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான தனி இட ஒதுக்கீடு, கல்வி மற்றும் சமூக முன்னேற்றத் திட்டங்கள் உள்ளிட்ட எண்ணற்ற மக்கள் நலச்சாதனைகள் அவரது ஆட்சிக் காலத்தை வரலாற்றில் தனித்துவமாகப் பதிவு செய்துள்ளன.

எனவே முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை நாளை (ஜூன் 3 புதன்கிழமை) அனைத்து ஒன்றியம் பகுதி பேரூர் - கிளை உட்பட்ட அனைத்துப் பகுதியிலும் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணியினர், உள்ளாட்சி பிரதிநிதிகள், அவரவர் பகுதிகளில் பங்கேற்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, கழக இருவண்ணக் கொடியேற்றி பொதுமக்களுக்கு இனிப்பு, நலத்திட்டங்கள் வழங்கி அன்னதானம், இரத்ததானம், கண் சிகிச்சை முகாம் நிகழ்ச்சிகளை ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளில், அவர் வகுத்துச் சென்ற சமூகநீதி மற்றும் திராவிடக் கொள்கைப் பாதையில் தொடர்ந்து பயணிக்க உறுதியேற்போம்.

இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.எம். கதிர்ஆனந்த் தெரிவித்துள்ளார்.

### சிவகங்கை மாவட்டத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## மாவட்டக் கழகத் தோழர்களுக்கு முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வேண்டுகோள்!

சிவகங்கை, ஜூன் 2-

நாளை (ஜூன் மூன்றாம் தேதி) திருப்பத்தூரில் காலை 10 மணி அளவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தும் தலைவர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் மாலை அணிவித்த மரியாதை செலுத்துகிறார். அதனைத் தொடர்ந்து கழகக் கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கி நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

இதுகுறித்து நாளை (3ம் தேதி) உலக தமிழர்களின்



ஒப்பற்ற தலைவர்தனது இறுதிநாள் வரை தமிழர்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்த தமிழினத் தலைவர் முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் பிறந்த நாள் தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

இதில் நமது மாவட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள், ஊராட்சி கழக நிர்வாகிகள் கழக கொடி ஏற்றியும் இனிப்புகள் வழங்கியும் கழக தலைவர் திராவிடமாடல் நாயகர் தளபதி அவர்கள் கடந்த 5ஆண்டுகளில் ஆட்சியில் மக்களுக்கு செய்த நன்மைகள் குறித்தும் மக்களிடம் எடுத்துக் கூறி கழகத்தின் பணி என்றும் தமிழ்நாடு மக்களுக்கு தான் என்பதை எடுத்துரைக்கும் வகையில் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திட வேண்டும்.

இந்த பிறந்தநாள் விழா நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கழகம் தேர்தலில் தோற்றாலும் மக்கள் பணியில் என்றும் தொய்வு இல்லாமல் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் கழகம் செயல்படும் என்பதை நிரூபித்திடும் வகையில் நம்முடைய முத்தமிழரிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழா சிவகங்கை மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அன்றையதினம் அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்படும்.

இவ்வாறு கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை மிக எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் அறிக்கை!

கள்ளக்குறிச்சி, ஜூன் 2-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம் முழுவதும் கழக நிர்வாகிகள் தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கிராம கிராமமாக கழக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டுமென வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் தமது அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது.

கழக தலைவர், சமூக நீதிக் காவலர், திராவிட



நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிபிற்கிணங்க, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கவனத்திற்கு,

தகைசால் தலைவராக எழுத்தாளராக கவிஞராக சொற்பொழிவாளராக திரைக்கதை வசன கர்த்தாவாக இலக்கியவாதியாக திரைப்பட தயாரிப்பாளராக தலைச்சிறந்த நிர்வாகியாக தமிழ்நாட்டின் 5 முறை முதலமைச்சராக உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும் திராவிட முன்னேற்ற கழக தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழ் அறிஞர் தமிழின தலைவர் கலைஞர் அவர்களது பிறந்த நாளை (3.06.2026 - புதன்கிழமை) காலை 9.00 மணியளவில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை மற்றும் வார்டு கழகங்களிலும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, கழக கொடியேற்றி, பொதுமக்களுக்கு இனிப்புகள், அன்னதானம், நலத்திட்டங்கள் வழங்கி கலைஞர் பிறந்த தினத்தை எழுச்சியுடன் மிக சிறப்பாக நடத்திட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழக மகளிர் அணி சார்பில் – முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா –

# தேர்தல் களத்தில் அயராமல் உழைத்த ‘வெல்லும் தமிழ்ப் பெண்களுக்கு’ நன்றி பாராட்டும் விழா!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை! விஜயா தாயன்பன் ஏற்பாடு!

சென்னை, ஜூன் 2 -

தி.மு.க. மகளிர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் தி.மு. கழகத்திற்காக தேர்தல் களத்தில் நின்று அயராமல் உழைத்த வெல்லும் தமிழ்ப் பெண்களுக்கு நன்றி பாராட்டும் விழா நாளை (3.6.2026 - புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் முத்தமிழ்ப் பேரவை, ராஜரத்தினம் கலையரங்கம் ஆர்.ஏ. புரம் (சத்யா ஸ்டுடியோ எதிரில்) நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இவ்விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையேற்று விழாப் பேருரை ஆற்றுகிறார்.

சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக செயலாளர் மயிலை த.வேலு முன்னிலை வகிக்கிறார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

இவ்விழாவில் மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி, மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் தமிழரசி ரவிக்குமார், மகளிர் அணி துணைச் செயலாளர் குமரி விஜயகுமார் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை கழக மகளிர் அணித் தலைவர் விஜயா தாயன்பன் சிறப்பாக செய்துள்ளார்.



கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, கோலியனூர் தெற்கு ஒன்றியம், அத்தியூர் திருவாதி ஊராட்சியில், விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கண்ணப்பன், கோலியனூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் தே.முருகவேல், கோலியனூர் ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஏ.சச்சிதானந்தம், மாவட்ட கவுன்சிலர் வனிதா ஹரிராமன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 103ஆவது பிறந்த நாள்! கழகத் தொழிலாளர் அணி சார்பில்

# மாநிலம் முழுவதும் ஏழையெளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிஎழுச்சியுடன் கொண்டாடிடுக!

## தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் வேண்டுகோள்!

சென்னை, ஜூன் 2 -

தகைமைசால் தலைவராக எழுத்தாளராக கவிஞராக சொற்பொழிவாளராக திரைக்கதை வசனகர்த்தாவாக இலக்கியவாதியாக திரைப்படத் தயாரிப்பாளராக தலைசிறந்த நிர்வாகியாக தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி,

பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளான ஜூன் 3 அன்று , தி.மு.க. தொழிலாளர் அணியின் சார்பில் மாநிலம் முழுவதும் மாநில நிர்வாகிகள் மற்றும் ஒவ்வொரு மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் மாநிலத்தில் அனைத்துப் பகுதிகளிலும் எழுச்சியுடன் கொண்டாடிட வேண்டுமெனவும்;

இப்பிறந்த நாள் விழாவினை, தொழிலாளர் அணிச் சார்பில் நலிந்த தொழிலாளர்களுக்கும் ஏழையெளியோர்க்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் வண்ணம் தத்தமது பகுதிகளில் உள்ள முதியோர் இல்லங்கள், அனாதை இல்லங்களில் ஏழையெளியவர்களுக்கு உணவு வழங்கியும் அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் வழங்கியும் எளியோர் எழுச்சி நாளாக சிறப்பாக கொண்டாடிட வேண்டுமென தி.மு.க. தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகளையும் அனைத்து மாவட்டத்திலுள்ள தொழிலாளர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களையும் தொழிலாளத் தோழர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.